## ஊரக வளர்ச்சி மற்றும்
## ஊராட்சித் துறை

மானியக் கோரிக்கை எண். 42

# அறிவிப்புகள்

2009 - 10

திரு. **மு. க. ஸ்டாலின்**

துணை முதலமைச்சர்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மானியக் கோரிக்கை எண். 42

# அறிவிப்புகள்

2009 - 10

திரு. **மு. க. ஸ்டாலின்**
துணை முதலமைச்சர்

## 1. ஒரு இலட்சம் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுமெனில், சுமார் ஒரு இலட்சம் புதிய சுய உதவிக் குழுக்கள் மாநிலத்தில் அமைக்கப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை வரும் இரண்டு ஆண்டுகளில் எய்தும் வகையில், 2009–10ம் ஆண்டில் 50 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்களும், 2010–11ம் ஆண்டில் மேலும் 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்படும். இப்பணி நிறைவடைந்த பின், நாட்டிலேயே வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து மகளிரையும் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக இடம் பெறச் செய்த முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழகம் பெறும்.

## 2. 1,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ள சுய உதவிக் குழுக்கள் எளிதில் வங்கிக் கடன் பெற்று நல்ல பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். இதற்காக, இத்தகைய கூட்டமைப்புகளை அமைத்து அவற்றிற்குத் தேவையான உதவிகளையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு அளித்து வருகிறது. இந்த கூட்டமைப்புகளை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான 1,000 கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை அளிக்கப்படும். இதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. 70,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

2008–09ம் ஆண்டில் தகுதி வாய்ந்த அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கிட அரசு முடிவெடுத்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் பயனடையும் வகையில் 150 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்தது. 1989ல் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் 31.3.2008 வரை, அதாவது 19 ஆண்டுகளில், 3,163 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டது. தமிழக அரசு பெருவாரியாக வழங்கிய சுழல் நிதி காரணமாகவும், வங்கிகளில் இருந்து அதிக கடன் பெற அரசு எடுத்த சிறப்பு முயற்சிகளின் பயனாகவும் 2008–09ம் ஆண்டில் மட்டுமே 2,174 கோடி ரூபாய் வங்கிக் கடன் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

தற்போது, கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சில விடுபட்டுப் போன குழுக்கள் பயன்பெறும் வகையில் இந்த நிதியாண்டில் சுமார் 70,000 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுடன் கூடிய சுழல் நிதி வழங்கப்படும்.

## 4. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களித்தல்

சுய உதவிக் குழுக்கள், வங்கிகளிலிருந்து கடன் பெறும் போது உரிமை ஆவணம், ஒப்படைப்பு ஆவணம் மற்றும் அடகு ஆவணம் போன்ற அடிப்படைக் கடன் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதற்காக முத்திரைத் தீர்வை செலுத்தி இந்த ஆவணங்களை தயார் செய்ய வேண்டியுள்ளதால், செலவும் அதிக காலதாமதமும் ஏற்படுகிறது. இதனைத் தவிர்த்து வங்கிகளிலிருந்து சுய உதவிக் குழுக்கள் கடன் பெறுவதை எளிதாக்கிட குழுக்கள் சமர்ப்பிக்கும் கடன் ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வைக்கு விலக்களிக்கப்படும்.

இதே போல ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளும் (Panchayat Level Federations), தொழில் கூட்டமைப்புகளும் (Economic Activity Federations), வங்கிகளிலிருந்து கடன் பெறுகின்றன. ஆதலால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் அமைக்கப்படும் இக்கூட்டமைப்பு களுக்கும் இந்த விலக்களிப்பு பொருந்தும்.

## 5. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் சிறப்பான செயல்பாடுகள்

இந்தியாவிலேயே தமிழகம் தான் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை மிக சிறப்பாகச் செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாக திகழ்கின்றது. மத்திய அரசு, இத்திட்டத்தினை தேசிய அளவில் சிறப்பாக செயல்படுத்திய 22 மாவட்டங்களை தேர்வு செய்து பிப்ரவரி, 2009ல் விருது வழங்கி பாராட்டியது. இவ்விருதினை திண்டுக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய 3 மாவட்டங்கள் தமிழ்நாட்டிலிருந்து பெற்றுள்ளன. 2008–09ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 1,722 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2009–10ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 1,963 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தினசரி ஊதியத்தை உயர்த்தி வழங்குதல்

விவசாயத் தொழிலாளர்களுக்காக குறைந்த பட்ச ஊதிய சட்டப்படி அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்த பட்ச ஊதியம் தான் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தினசரி ஊதியமாகும். தமிழ்நாட்டில் இந்த ஊதியம் 2005ம் ஆண்டில் ரூபாய் 80 ஆக நிர்ணயிக்கப்பட்டது. நான்காண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியம் 80 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்திட இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 7. தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர் குறை தீர்க்க இலவச தொலைபேசி சேவை

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்கள், திட்டம் தொடர்பான குறைகளை நேரடியாக உயர் அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வாய்ப்பை ஏற்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என இந்த அரசு கருதுகிறது.

இதற்காக, மாநிலம் தழுவிய இலவச தொலைபேசி சேவை (Help Line) ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சேவையைப் பயன்படுத்தி குறிப்பிட்ட தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு குறைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

## 8. 1,325 கோடி ரூபாய் நிதியில் பாரதப் பிரதமர் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் தொடங்கப்பட்ட 2000–01 முதல் 2007–08ம் ஆண்டு வரை 713 கோடி ரூபாய் நிதி பெறப்பட்டது. தமிழக அரசு எடுத்த சீரிய முயற்சியின் பயனாக 2008–09ம் ஆண்டில் மட்டுமே சுமார் 1,325 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டை பயன் படுத்தி சுமார் 5,114 கி.மீ ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

## 9. நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலைகள் மேம்பாடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதோடு அவ்வூராட்சிகளுக்குச் செல்லும் சாலைகளையும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தி தார் சாலைகளாக மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2006–07 மற்றும் 2007–08 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 6,412 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைப்பணிகள் 825 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதே போல, 2008–09ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில், நபார்டு வங்கி ஒப்புதலுக்குப் பின்னர் 2,822 கி.மீ. நீளமுள்ள ஊரக சாலைப் பணிகள், சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 10. பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் தார் சாலைப் பணிகள்

2006–07, 2007–08 மற்றும் 2008–09ம் ஆண்டுகளில் பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் பழுதடைந்த ஊரகத் தார் சாலைகளை சீரமைத்தது போலவே இந்த ஆண்டும் 103 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்த தார் சாலைகள் மேம்படுத்தப்படும்.

## 11. இரண்டடுக்கு கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்துதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில், கடந்த மூன்றாண்டுகளில் இரண்டடுக்கு கப்பிச் சாலைகள் மட்டும் அமைக்கப்பட்டு தார் சாலை வசதி ஏற்படுத்தப்படாமல் உள்ள சாலைகளைக் கண்டறிந்து அச்சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்தும் வகையில் 1,000 கி.மீ சாலைகள் சுமார் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

## 12. ஒரு இலட்சத்து 35 ஆயிரம் புதிய தொகுப்பு வீடுகள்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு ஒன்றிற்கான அலகுத்தொகை 55,000 ரூபாய் ஆகும். இதில் மத்திய அரசு, ஒவ்வொரு வீட்டிற்கும் 26,250 ரூபாய் மானியமாக வழங்குகிறது. மாநில அரசு, ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்க வேண்டிய பங்குத் தொகையான 8,750 ரூபாயுடன் கூடுதலாக கான்கிரீட் கூரை அமைத்திட 20,000 ரூபாய் நிதியினை வழங்குகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 63,000 புதிய தொகுப்பு வீடுகள் இலவசமாக கட்டித் தரப்பட்டன. 2009–10ம் நிதியாண்டில் சுமார் 1,35,000 புதிய தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக, தமிழக அரசு சுமார் 390 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும்.

## 13. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

2006–07, 2007–08 மற்றும் 2008–09ம் ஆண்டுகளில் சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதைப் போல **2009–10**ம் ஆண்டிலும் **2,511** கிராம ஊராட்சிகளில் சுமார் **507** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 14. ஊராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகள்

2006–07, 2007–08 மற்றும் 2008–09ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் சுமார் 8,000 பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையங்கள் அமைத்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வூராட்சிகளில் உள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் அரசின் புதிய முயற்சியாக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று ஊராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும். இதற்காக, 2009–10ம் ஆண்டில் சுமார் 8 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

## 15. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, 2008–09ம் ஆண்டில் 29 புதிய சமத்துவபுரங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. 2009–10ம் ஆண்டில் மேலும் 30 சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். இதற்காக 75 கோடி ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 16. நமக்கு நாமே திட்டம்

வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்தி அவர்களது பங்களிப்போடு பணிகளை மேற்கொள்ளும் நமக்கு நாமே திட்டம், இந்த அரசால் மீண்டும் 2007–08ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களிடம் இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில் 2009–10ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென இந்த அரசால் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 17. ஊரக கட்டமைப்புத் திட்டம்

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தவும், சிறு கட்டடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் ஊரக கட்டமைப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை **2008–09**ம் ஆண்டு இந்த அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் **350** கோடி ரூபாய் செலவில் கிராமப்புறங்களில் பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதே போல, **2009–10**ம் ஆண்டில் ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள **350** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 18. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள சுமார் **29,000** ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பெரும்பாலான பள்ளிகள் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் இருந்தன. இந்தப் பள்ளிக் கட்டடங்களை புதுப்பிக்க ஒரு சிறப்பான திட்டமாக 'ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்' **2007–08**ம் ஆண்டு துவக்கப்பட்டது.

சென்ற ஆண்டைப் போல, **2009–10**ம் நிதியாண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் உள்ள சுமார் **5,000** பள்ளிகளிலும், பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள சுமார் **500** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் கட்டடம் சீரமைக்கும் பணிகள் **85** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 19. ஊரக பகுதிகளில் கூடுதலாக 50,000 தெருவிளக்குகள்

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் பெருவாரியாக தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், ஒரு சில பகுதிகளில் தெருவிளக்கு வசதி செய்ய வேண்டியுள்ளது. அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் **50,000** புதிய தெருவிளக்குகள் சுமார் **50** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

## 20. 500 கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் பல மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இக்கட்டடங்களுக்குப் பதிலாக நடப்பாண்டில் சுமார் 30 கோடி ரூபாய் செலவில் 500 கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்கள் புதிதாக கட்டப்படும்.

## 21. மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களுக்கு கணினி வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களை விரிவாகத் தெரிந்து கொள்ளவும், திறம்படக் கண்காணித்திடவும் ஏதுவாக தமிழ்நாட்டிலுள்ள 29 மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கும், 385 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் அலுவலகப் பயன்பாட்டிற்கென இந்த ஆண்டில் சுமார் ஒரு கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் கணினி வழங்கப்படும்.

## 22. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் கிராம ஊராட்சிகளுக்கு ஊக்க நிதி

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சிறப்பாகச் செயல்பட உறுதுணையாக இருந்து, ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக ஆர்வமுடன் செயல்படும் கிராம ஊராட்சிகளை ஊக்குவிப்பதற்காக ஊக்க நிதி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 48 கோடி ரூபாய், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடப்பாண்டில் 400 கிராம ஊராட்சிகளுக்கு சுமார் 10 கோடி ரூபாய் ஊக்க நிதியாக வழங்கப்படும்.

## 23. பணியமைப்பு

1) தமிழ்நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கென (கிராம ஊராட்சிகள்) தனியாக தொலைபேசி வசதி மற்றும் நிகரி வசதி இல்லை. கிராம ஊராட்சிகளின் நிர்வாகம், வளர்ச்சிப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பாக கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் பொது மக்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களை (கிராம ஊராட்சிகள்) எளிதில் தொடர்பு கொள்ள ஏதுவாக தனியாக புதிய தொலைபேசி வசதி மற்றும் நிகரி வசதி செய்து தரப்படும்.

2) திட்டப் பணிகளை ஆய்வு செய்து, விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக உதவி இயக்குநர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு சுமார் 7 கோடி ரூபாய் செலவில் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 150 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.